BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# InvestBrampton.ca எனும் நமது புதிய வலைத்தளமானது, உள்ளூர் வணிகங்கள், தொழில்முனைவோர் மற்றும் அயல்நாட்டு முதலீட்டாளர்களுக்கான டிஜிட்டல் உதவிப்பொருட்கள் மற்றும் தகவல்களை வழங்குகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஜுன் 3, 2020) – இன்றைய தினம், நமது நகர நிர்வாகமானது InvestBrampton.ca, என்னும் ஒரு புதிய வலைத்தளத்தை துவக்கி, வணிகங்கள், தொழில்முனைவோர் மற்றும் சாத்தியமான அயல்நாட்டு முதலீட்டாளர்கள் ஆகியோர், ப்ராம்ப்ட்டன் நகரில் ஒரு இடத்தை தேர்ந்தெடுத்து தங்கள் தொழிலைத் துவக்கி, அதனை வளர்க்க உதவும் வகையிலான தகவல்களை மத்தியமயமாக்கப்பட்ட ஒரு ஆதாரத்தில் வைத்து அவற்றை அணுகும் வகையில் வழங்குகிறது. இந்தப் புதிய InvestBrampton.ca என்னும் வலைத்தளமானது நகரின் பொருளாதார மீட்சி யுக்தியில் உடனடியான ஒரு செயல்பாடாக தனித்து எடுத்துக்காட்டப்பட்ட ஒரு விஷயமாகும்.

பரஸ்பர செயல்புரியும் தன்மை மீது கவனம் குவிக்கின்ற இந்த வலைத்தளமானது, தளத்தைத் தேர்வு செய்பவர்கள், சாத்தியமான முதலீட்டாளர்கள் மற்றும் உள்ளூர் வணிகர்களுக்கான தகவல்களை விரைவாகவும் எளிதாகவும் கண்டுபிடித்து தருவதிலும், நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசகர்களைத் தொடர்பு கொள்வதையும் எளிதாக்குகிறது. புதிய அம்சங்களில் அடங்குபவை: ஆதார வளங்களுக்கான ஒரு மத்தியமாக்கப்பட்ட பக்கம், ஒரு தளத்தைத் தேர்வு செய்ய உதவும் விஷயங்கள் மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட, பழகுமுறைக்கு ஏற்ற சேவையை வழங்குகின்ற புதிய முதலீட்டு சேவைகள் அளிக்கும் குழுவுடன் நேரடியான அணுகல். இந்த தளமானது உரையாடல் செய்யும் வசதியையும் கொண்டுள்ளது.

உள்ளூர் பொருளாதாரத்தை மறுதொடக்கம் செய்வதன் மூலம் நகரம் முன்னேறுவதற்கான ஒரு கட்டமைப்பு பணியாக பொருளாதார மீட்பு வியூகத்தை மே 13 தேதியன்று ப்ராம்ப்ட்டன் நகர் மன்றம் அங்கீகரித்தது. மேயரின் கோவிட் 19 பொருளாதார ஆதரவு பணிப்படையானது நகரத்தின் பொருளாதார மீட்புக்கான யுக்தியின் வளர்ச்சிக்கு வழிகாட்டியது, இது பின் வரும் இந்த நான்கு அடிப்படைச் செயல்களைச் செயல்படுத்துவதன் மூலம் அடையப்படும்: புதுமை படைத்தல், தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனையும் தன்மை, முதலீடு, உள்கட்டமைப்பு மற்றும் கலை, கலாச்சாரம் மற்றும் சுற்றுலா.

ப்ராம்ப்ட்டன் நகரின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கவென்றே சமீபத்தில் துவக்கப்பட்ட இதர முனைப்புக்களில், நகரத்தின் உள்ளூருக்கு ஆதரவளியுங்கள் பிரச்சாரம் மற்றும் டிஜிட்டல் ஷாப் ஹியர் திட்டநிகழ்ச்சி ஆகியவையும் அடங்கும்.

ப்ராம்ப்ட்டன் நகரமானது, கிட்டத்தட்ட 74,000 வணிகங்களுக்கு இடமளித்திருக்கிறது. 2019 ஆம் ஆண்டில், ப்ராம்ப்ட்டன் தொழில்முனைவோர் மையமானது, கிட்டத்தட்ட 1,000 சிறு வணிக ஆலோசனை கூட்டங்களை நடத்தியது மற்றும் 10,000 சிறு வணிக விசாரிப்புக்களை கையாண்டது.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ ப்ராம்ப்ட்டன் நகரின் பொருளாதார மீட்சிக்கான பணியை நாங்கள் செய்துவரும்போது, எங்கள் தற்போதைய வணிகங்களைத் தக்கவைத்தல், மற்றும் விரிவுபடுத்துதல், மற்றும் எங்கள் நகரத்திற்கு புதிய முதலீடுகளைக் கொண்டுவருதல் ஆகியவையே எங்களுக்கான முக்கிய கவன ஈர்ப்பாக இருக்கும். இந்த புதிய வலைத்தளமானது, தற்போதுள்ள எங்கள் வணிகங்களை நாங்கள் ஆதரித்து உதவுவதற்கான வழிகளில் ஒன்றாக இருக்கும்; சிறந்த முதலீட்டு இருப்பிடமாக ப்ராம்ப்ட்டன் வழங்கும் பல நன்மைகளை எடுத்துரைக்க உதவும் வழிகளில் இதுவும் ஒன்றாக இருக்கும்!”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“கோவிட்-19 தாக்கத்திலிலிருந்து விடுபட்டு பொருளாதார மீட்சியை நோக்கி நாம் செல்லும்போது, சாத்தியமான முதலீட்டாளர்களுடன், குறிப்பாக வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் இணைவதற்கான புதிய வழிகளை நாம் கவனிப்பது அவசியமாகும். வணிகத்தை ஈர்ப்பதற்காக, நாம் மேற்கொண்டிருக்கும் புதிய வழியின் ஒரு அங்கமாக அயல்நாட்டு நேரடி முதலீட்டு தொலைநோக்கு செயல்பணிகளுக்கான அணுகுமுறையை நாம் கணிசமாக மாற்ற வேண்டும். ஒருவருடன் - ஒருவர் என்ற முறையிலான உரையாடல்கள் மற்றும் உறவை வளர்ப்பதற்கான முயற்சிகள் ஆகியவற்றுக்கும் மேலதிகமாக, இந்த Investbrampton.ca என்ற வலைத்தளம் நமது சாத்தியமான முதலீட்டாளர்களுக்குத் தேவையான ஆரம்ப தகவல்களை எளிதாகவும் ஒரே இடத்திலும் சேகரிக்க உதவும்.”

- *பால் வின்செண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1&5; இணை தலைமை பொறுப்பாளர், மேயரின் கோவிட்-19 பொருளாதார ஆதரவுக்கான பணிப்படை*

“கோவிட்-19 தாக்கத்தின் போது பொருளாதார ஆதரவுக்கான பணிப்படையானது உள்ளூர் வணிகங்களுடன் விடாமுயற்சியுடன் செயல்பட்டு வருகிறது; மேலும் இந்த ஆதரவை ஒரே மாதிரியாக பேணி வருவதில் உறுதியாக உள்ளது; இதனால் நமது உள்ளூர் பொருளாதாரம் மீட்சி பெற்று, மேலும் வலுவாக வெளிவர முடியும். நாங்கள் முன்னேறிச்செல்லும்போது நமது நகரத்தின் பின்னடைவு மற்றும் போட்டிகரமான தன்மையின் பலன்களை உறுதிப்படுத்த நமது பொருளாதார மீட்புக்கான யுக்தி உதவும்*.”*

- *மைக்கேல் பல்லேஸ்கி, பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 2&6; இணை தலைமை பொறுப்பாளர், மேயரின் கோவிட்-19 பொருளாதார ஆதரவுக்கான பணிப்படை*

“ நாடு முழுவதும் உள்ள வணிகங்கள் மற்றும் இதர அமைப்புகளைப் போலவே, நமது நகரமும் கோவிட்-19 தொற்று பரவலின் எதிர்மறையான நிதி தாக்கங்களை உணர்ந்துள்ளது. பொருளாதார மீட்சி என்பதே

நாம் முன்னேற ஒரு முக்கியமான கவனம் செலுத்தப்பட வேண்டிய விஷயமாகும், மேலும் பலவிதமான முன்முயற்சிகளைக் கருத்தில் கொண்டு, அவற்றை ஒன்றிணைத்து நம்மை நாமே முன்னோக்கி நகர்த்துவோம்."

– *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca